குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.250/2018

அ.சா.4

2025–ம் ஆண்டு மார்ச் 14 ம் தேதி வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சி 04–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தினேஷ்குமார் | தொழில் | |
| தந்தை பெயர் | கந்தசாமி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.08 மணி,

Accused Senthilkumar present. Advocate Mr. Ezhilarasu present for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

**1.** நான் ராசிபுரத்தில் குடியிருந்து கொண்டு தற்போது கணினி துறையில் வேலை பார்க்கிறேன். கடந்த 2018 ம் ஆண்டு ஓமலூர் டோல்கேட் அருகே உள்ள கே.கே.சிக்கன் ஸ்டாலில் லோடு மேனாக வேலை செய்து வந்தேன். கடந்த 2018 ம் வருடம் ஒரு நாள் இரவு பொலீரோ வாகனத்தில் ஆஜர் எதிரி ஓட்ட நான் அமர்ந்து வந்தேன். என்னுடன் கார்த்திக் என்ற லோடு மேனும் இருந்தார். சின்னதிருப்பதியில் இருந்து சேலம் நோக்கி வந்து கொண்டு இருந்த போது நான் தூங்கிவிட்டேன். அப்போது சத்தம் கேட்டது. வண்டியில் இருந்து கீழே இறங்கி பார்த்த போது இருசக்கர வாகனத்தில் வந்த நபர் நான் சென்ற வண்டியில் பின்புறம் இடித்து கீழே விழுந்து கிடந்தார்.

2. நான் சென்ற ஆஜர் எதிரி ஓட்டிய பொலீரோ வாகனத்தின் பதிவெண் மற்றும் விபத்திற்குள்ளான இருசக்கர வாகனத்தின் பதிவெண்ணும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**( அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

3. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 03.09.2018 ம் தேதி இரவு 10.30 மணியளவில் சின்னதிருப்பதி டூ வெள்ளார் செல்லும் சாலையில் சுமைதாங்கி ஏரி அருகே ஆஜர் எதிரி TN 90 2173 என்ற பதிவெண் கொண்ட பொலீரோ பிக்ப் வேனை அதிவேகமாகவும் ஆஜாக்கரதையாகவும் ஹாரன் அடிக்காமலும் ஓட்டிச் சென்று, அதே சாலையில் அவருக்கு எதிர் திசையில் சின்னதிருப்பதி நோக்கி வந்த TN 30 AW 3850 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த கார்த்திக்கேயன் என்பவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதை நான் ஆஜர் எதிரி ஓட்டிச் சென்ற விபத்து ஏற்படுத்திய வாகனத்தில் பயனம் செய்து விபத்தை நேரில் பார்த்து விட்டு தற்போது எதிரி எனது நண்பர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

இல்லை.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.17 மணி**

ஒம்/–ச.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.